சாதியிலேயும் ஏறக்குறைய 75 விழுக்காடு மக்கள் தொகைக் கொண்டவர்களுக்கு இன்றைக்கு 7 விழுக்காடு கிடைப்பதுதான் உண்மை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை இங்கே ஏற்கெனவே எழுப்பப்பட்டு, நான் விளக்கம் அளித்திருக்கிறேன். "108 சாதி, 108 சாதி" என்று சொல்வது தவறு. பிழை உடையது. 108 சாதிகள் இருக்கலாம். ஆனால், ஒவ்வொரு சாதியிலும்—வன்னியர்கள் இருப்பதைப்போன்று அவ்வளவு மக்கள் தொகை கிடையாது. அதை நாம் மறந்துவிடக் கூடாது. 1,000 பேர் கொண்ட சாதிகள்கூட இருக்கின்றன. அதை இந்த 108 சாதியிலே சேர்த்துக்கொண்டு, வன்னியர்களுடைய எண்ணிக்கையைக் குறைத்துவிட்டதாகச் சொல்வது தவறு. நீங்கள் கடந்த காலங்களில் இந்த மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான—குறிப்பாக, வன்னியர்களுக்கு ஒதுக்கப்பட்ட சதவிகித அறிவிப்புக்குப் பிறகும், முன்பும் என்று நீங்கள் எடுத்துக்கொண்டு பார்த்தால், முன்பு மருத்துவக் கல்லூரியில் அல்லது பொறியியல் கல்லூரியில் வன்னிய சமுதாய மக்களுக்கு எவ்வளவு இடம் கிடைத்தது—இந்தச் சட்டம் வந்த பிறகு, இந்த இட ஒதுக்கீட்டைத் தந்த பிறகு எவ்வளவு பேருக்கு இடம் கிடைத்தது என்பதைப் பார்த்தால், அதிக இடங்கள் வன்னியப் பெருமக்களுக்குக் கிடைத்திருக்கிறது என்பதை நான் உறுதியாக சொல்வேன், அதை மறந்துவிடக் கூடாது. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இல்லை, இல்லை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்ன பிறகு, there would be no further clarification. திரு. சபா இராஜேந்திரன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் டாக்டர். மாண்புமிகு முதல்வரே முழுவதும் சொல்லிவிட்டார்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், 108 சாதிகளுக்கும் இட ஒதுக்கீடு கொடுத்த பிறகுதான் பல

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: அப்படியொரு மாறுதல் செய்தால், அதற்குப் பிறகும் ஆந்திராவிலேயிருந்தும், கர்நாடகத்திலேயிருந்தும், இப்படிக் கள்ளத் தோணியிலே யாரும் வரமாட்டார்கள் என்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களால் உறுதி அளிக்க முடியாது. ஆகையால் நான் சொல்கிறேன், இப்போது உள்ள நிலையில், அந்தத் தவறு நடந்தால், அதைத் தட்டிக் கேட்க, அதைத் தடுத்து நிறுத்த இந்த அரசு நிச்சயமாகத் தயங்காது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன். (குறுக்கீடு) இப்படிக் கேட்டுக்கொண்டே இருந்தால், இன்று மானியக் கோரிக்கையை முடிக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. இராஜேந்திரன்.

***திரு. சபா. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நீதிக் கொள்கைகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து தமிழக சரித்திரத்தை மாற்றி எழுதி சாதனை பல படைத்து, எழிலார்ந்த இம்மாபெரும் சட்டமன்றம் மற்றும் தலைமைச் செயலக வளாகத்தை உருவாக்கி எம்போன்றவர்களுக்கும் பேச வாய்ப்பளித்திருக்கிற மாண்புமிகு தமிழக முதல்வர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். நட்புக்கு இலக்கணமாய் தலைவர் கலைஞருக்கு உறுதுணையாய் இருக்கும் மாண்புமிகு நிதியமைச்சர் இனமானப் பேராசிரியர் பெருந்தகை அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இளைஞர்களின் உள்ளத்தை திராவிட இயக்கத்தின் பக்கம் ஈர்த்து அவர்களை கொள்கை வழிப்படுத்தி, மக்கள் தொண்டுக்கு உரியவர்களாக உயர்த்தி, தமிழகத்தின் அடுத்த தலைமுறையை உருவாக்கிய மனிதராக உயர்ந்து நின்று கொண்டிருக்கும் இளைய தலைமுறையின் எழுச்சி நாயகர் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை மானிய கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 1921—ல் தமிழ்நாட்டில் வகுப்புவாரி ஒதுக்கீடு என ஆரம்பித்த சமூக நீதிப் பயணம், இன்னமும்

மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வுப் பணிகள் முடிந்தவுடன்... *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–40

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆட்சி இருக்கின்றபோதே அதைக் கொடுத்து நிறைவேற்ற வேண்டுமென்று சொல்லுகின்றார். இதைக் கொடுக்கும்போதும் ஆட்சி இருக்கும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. சுதர்சனம்.

***திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு மிக முக்கியமான ஒரு மானியக் கோரிக்கை இங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சுமார் மூன்றரை மணி நேரம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே உட்கார்ந்துகொண்டு, எந்தெந்த உறுப்பினர்கள் என்னென்ன கருத்துகளைச் சொல்கிறார்கள் என்பதைப்பற்றி விவரமாகக் கேட்டுக்கொண்டிருந்தார்கள். இதிலிருந்தே, சிறுபான்மை மக்கள்மீது, பிற்படுத்தப்பட்ட மக்கள்மீது, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்கள்மீது மாண்புமிகு தமிழக முதலமைச்சருக்கு எவ்வளவு அக்கறை இருக்கிறது என்பதை நாம் தெரிந்துகொள்ள முடிகிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

நேற்றைக்குக்கூட உள்ளாட்சித் துறை மானியம் இங்கே நடைபெற்றபோது, ஒன்றரை மணி நேரம் மானியத்திற்குப் பதிலளித்து நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் பேசினார்கள். அப்பொழுதுகூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இல்லை. இன்று, சிறுபான்மை மக்கள்மீது கொண்டிருக்கின்ற அக்கறையின் காரணமாக, *(மேசையைத் தட்டும் ஒலி)* பிற்படுத்தப்பட்ட மக்கள்மீது அவருக்கு இருக்கின்ற அக்கறையின் காரணமாக, மிகப் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு நன்மை செய்ய வேண்டும், எந்தெந்த உறுப்பினர்கள் என்னென்ன சொல்கிறார்கள் என்று கேட்டும், சிறுபான்மை ஆணையத்திற்கு உடனடியாக சட்டபூர்வ அங்கீகாரம் வழங்க